1979 ஏப்ரல் 30]

அணை மூலமாக இன்னும் மீண்டும் எவ்வளவு தூரம் பாசன வசதியை அதிகரிக்க முடியும் என்பதை ஆய்வு செய்யத் தான் திட்ட ஆய்வுக் கோட்டம் மேற்பார்வைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டு, இன்று அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 883 மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகிறது.

கன்னிமாரா பொது நூலகம், சென்னை

*வினா எண் 877—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தில் கிரேடு—I பிபிளியோகிராபர் பதவிகள் காலியிருந்தும் அதை நிரப்பாததற்கு காரணம் ஏதும் உண்டா?

(ஆ) அதை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) & (ஆ): 1976–1977 நிதி ஆண்டு முதல் வெளிநாட்டு ஆங்கில நூல்களை வாங்க கன்னிமாரா பொது நூலகத்திற்கு வருடா வருடம் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. அவ்வாறு வாங்கும் நூல்களை தரம் பிரித்து கைவசமுள்ள நூல்களுடன் சேர்க்க பிபிலியோகிராபர் உதவியாளர்—முதல் நிலை பதவி தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டு, (ஒவ்வொரு வருடமும், நூல்கள் வாங்க அரசின் நிதி ஒதுக்கீடு கிடைத்ததும்) இப்பதவியையும் தொடர அரசு ஆணைப் பெற்று, இப் பதவியும் வருடா வருடம் தொடரப்பட்டு வருகிறது. இதன்படி 1978–1979-ம் நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. ஒரு இலட்சம், அரசு ஆணை எண். 1253, கல்வி, நாள் 7.7.78-ல் அனுமதிக்கப் பட்டதும், இப் பதவியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு 29.10.78-ல் நிரப்பட்டன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த கிரேடு 1 பிபிலியோகிராபர் போஸ்டுக்கு ஏற்கனவே 'அட்ஹாக் ரூல்ஸ்' என்று, ஜி.ஓ. எம்.எஸ். 1133, 21.6.78—ஆம் தேதி வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு கிராஜுவேட்டாக இருக்க வேண்டும், டிப்ளாமா அல்லது டிகிரி லைபரரி சயன்ஸில் பெற்றிருக்க வேண்டும், தாய்மொழி தமிழாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு டைரக்டர் தன் சொந்தக்காரருக்குப் பதவி உயர்வு தர வேண்டுமென்பதற்காக, ஆவுடையப்பன் என்பவருக்குத் தர வேண்டும் என்பதற்காக, தவறாக இந்த அட்ஹாக் ரூலுக்கு விரோதமாக அப்பாயிண்ட் செய்து விட்டும், மேலும்....

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. ரா. கிருஷ்ணன்: இப்படிச் செய்து விட்டு, இப்பொழுது இந்த அட்ஹாக் ரூல்ஸ்க்கு விரோதமாகவே பிபிலியோகிராபர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இது முறையா? இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஏதேனும தவறு இருந்தால் அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும், செங்கோட்டை தாலுக்காவிலேயும் தற்பொழுது நூலக வசதி இல்லாதிருப்பதால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இப்பொழுது கன்னிமாரா நூலகத்திற்கு ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக அறிகிறேன். அப்படி வெளிநாட்டுப் புத்தகங்களை வரவழைக்கும் பொழுதும்கூட—மார்டன் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட புத்தகங்கள் அங்கு இல்லை என்ற குறை சொல்லப்படுகிறது—அங்கு செலக்ட் செய்யப்படுவதில் கூட கமிஷன் அதிகமாகக் கிடைக்குமா என்ற நோக்கத்தோடு செலக்ட் செய்வதாகத் தெரிகிறது. நவீன காலத்திற்கேற்ற வகையில் விஞ்ஞான ரீதியில் உள்ள புத்தகங்களை அதிகமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட தவறான முறையிலே புத்தகங்கள் வாங்குவதை இந்த அரசு விரும்பவில்லை. ஆகவே, மக்களுக்குத் தேவையான அல்லது நமது முன்னேற்றத்திற்குத் தேவையான புத்தகங்களை வாங்க வேண்டுமென்றுதான் நாம் வெளிநாட்டுப் புத்தகங்களை வாங்க இந்த நிதி ஒதுக்கீடு செய்கிறோம். குறிப்பாக, வாசகர்களுடைய அபிப்பிராயங்களை இப்படி புத்தகங்கள் வாங்கும் போது நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டால் நல்லது என்ற கருத்தை நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் புத்தகங்கள் செலக்ட் செய்வதைப் பொறுத்த வரையிலே, அதற்கென்று ஒரு நல்ல அறிஞர்களுடைய கமிட்டி நியமிக்கப்படுமா? இப்பொழுது டைரக்டர் தான் அவருடைய இஷ்டத்திற்கு வாங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே, புத்தகங்களை வாங்க, எக்ஸ்பெர்ட் கமிட்டி மாதிரி நியமிக்க அரசு முன் வருமா?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு தேவை இருப்பதாக அரசு உணரவில்லை. பிற்காலத்திலே பார்ப்போம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

'அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி'

வினா 1001—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத அரிசன காலனி எத்தனை, மாவட்ட வாரியாக ?

(ஆ) இவைகளுக்கு உடனடியாகக் குடிநீர் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை :

(அ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டிய காலனிகள் விபரம் வருமாறு :—

வரிசை எண்.	மாவட்டம்.	சென்ற 5 ஆண்டுகளில் குடிநீர் வசதி செய்யப்பட்ட காலனிகள்.	இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டிய காலனிகள்.	நடப்பு ஆண்டில் குடிநீர் வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காலனிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	செங்கல்பட்டு	85	261	76
2.	கோயம்புத்தூர்	198	43	42
3.	தர்மபுரி	28	153	15
4.	கன்னியாகுமரி	32	69	8
5.	மதுரை	86	156	9
6.	வட ஆற்காடு	115	119	17
7.	புதுக்கோட்டை	79	116	16
8.	இராமநாதபுரம்	189	206	61
9.	தென் ஆற்காடு	240	73	55
10.	தஞ்சாவூர்	249	195	77
11.	திருச்சிராப்பள்ளி	197	162	36
12.	திருநெல்வேலி	27	56	21
13.	நீலகிரி	23	..	5
14.	சேலம்	85	37	7
		1,633	1,646	445

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS